ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2298/24 - 2022 සැප්තැම්බර් මස 20 වැනි අඟහරුවාදා - 2022.09.20
2298/24 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பீ. 9/73* (XII) (B)

**(469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்**

2 ஆம் பிரின் கீழான கட்டளை

(469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர், மஹிந்த அமரவீர ஆகிய நான், இக்கட்டளை மூலம் -

(1) இதற்கான அட்டவணையில் விவரிக்கப்பட்ட காணி இடப்பரப்பு, இக்கட்டளை வெளியிடப்படும் தேதியிலிருந்து பயனுறுவதாக, "கல் ஓயாப் பள்ளத்தாக்கு வடகிழக்குச் சரணாலயம்" எனவழைக்கப்பட்டு அறியப்படும் சரணாலயத்தின் பாகமொன்றாக இல்லாதொழிதல் வேண்டுமென அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்கீழ் வெளிப்படுத்துகின்றேன்; அத்துடன்

(2) பரப்பளவில் ஏறத்தாழ 48 சதுர மைல்களைக்கொண்டதும் 1954 ஆம் ஆண்டின் பெப்புருவரி 12 ஆந் திகதிய 10640 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைக்கான அட்டவணையின் பந்தி (இ) இல் விவரிக்கப்பட்டதும் "கல் ஓயாப் பள்ளத்தாக்கு வடகிழக்குச் சரணாலயம்" எனவழைக்கப்படும் காணி இடப்பரப்பிலிருந்தானதும் இதற்கான அட்டவணையில் விவரிக்கப்பட்டதுமான இடப்பரப்பைத் தவிர்த்ததன்பின்னர் எஞ்சியுள்ள காணி இடப்பரப்பு "கல் ஓயாப் பள்ளத்தாக்கு வடகிழக்குச் சரணாலயம்" எனவழைக்கப்பட்டு அறியப்படவேண்டுமென அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் வெளிப்படுத்துகின்றேன்.

**மஹிந்த அமரவீர,**
வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர்.

கொழும்பு,
2022, ஒகத்து 30.

1A - G 6000 — 606 (2022/09)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

**"கல் ஓயாப் பள்ளத்தாக்கு வடகிழக்குச் சரணாலயத்திலிருந்து" தவிர்க்கப்பட்ட காணி இடப்பரப்பின் எல்லைகள்**

*இதன்கீழ் 2021, யூலை 01 ஆந் தேதியிடப்பட்ட* AM/AMP/*2021/197 ஆம் இலக்கப் படியெடுப்பில் குறித்துக்காட்டப்பட்டதும் 1:4000 என்ற அளவின் அடிப்படையின்மீது இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட 2021, மே 18 ஆந்தேதியிடப்பட்ட* D. S *(அம்பாறை) 2021/27 ஆம் இலக்க நிலஅளவைக்கிணங்க இதன்கீழ் தரப்பட்டதும் சொல்லப்பட்ட படியெடுப்பின்படி பரப்பளவில் 46.18 ஹெக்டேயர்களை எல்லாமாகக் கொண்டுள்ளதும் காணித்துண்டங்கள் இல. (அ) (27.3503 ஹெக்டேயர்கள்), (ஆ) (12.8591 ஹெக்டேயர்கள்) மற்றும் (இ) (5.9706 ஹெக்டேயர்கள்) எனவடையாளமிடப்பட்டதுமான அக்காணி இடப்பரப்பு அடங்கலும்.*

**AM/AMP/*2021/197* ஆம் இலக்கப் படியெடுப்பு**




TRACING NO. AM/AMP/2021/197
Tracing Showing the Developed Areas with in Ampara Sanctuary
( Zone A, B and C of Wild-Life Conservation Department)
SRI LANKA SURVEY DEPARTMENT
: Ampara Sanctuary
: Ampara
: Ampara
: Eastern
To Post Office


TRACING NO. AM/AMP/2021/197
To Rest House
To Prabodha Hospital


TRACING NO. AM/AMP/2021/197
SRI LANKA SURVEY DEPARTMENT
Ampara Sanctuary

EOG 9-0229